








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 13 9.04.2026



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

*************************************************************************************
*************************************************************************************

முத்துக்கள்

## பணமே பிறவிக்குச் சத்ரு!

**"பகவான் ஒருவானே கிடைத்தற்கரிய செல்வம்! மற்ற செல்வங்கள் அனைத்தும் பிறவிக்கு எதிரி" எனக் கருதுவர், தர்மநெறியின் சூட்சுமங்களை அறிந்த பாகவதோத்தமர்கள்!**

**தினமும் "உஞ்சவிருத்தி" (பஜனை பாடிச் செல்லுதல்) எடுத்தே தானும், தன் உத்தம மனைவி திருமங்கை, மற்றும் குழந்தை ஆகியோருக்கு ஒரே ஒருவேளை உணவிற்கு மட்டுமே தேவையான அரிசி கொள்ளும் அளவிற்குச் சிறு செம்பு ஒன்று ஸ்வாமி ஸ்ரீதேஸிகன் தோளில் இருக்கும். மறுநாளைக்கென்று, எதையும் அவர் சேர்த்து வைத்துக் கொள்வதில்லை.**

**மஹான்களும், பரமதாச ஸ்ரேஷ்டர்களான ஸ்ரீதியாகராஜ ஸ்வாமிகள், ஸ்ரீபுரந்தர தாஸர், ஸ்ரீநாமதேவர் போன்றவர்களும், இதுபோன்றுதான் தங்களது ஒருவேளை உணவிற்கு அவசியமான அரிசியை மட்டுமே, தங்கள் உஞ்சவிருத்தியின் போது ஏற்றுக் கொள்வார்கள். சாதாரண ஆசைகூட கிடையாது இவ்வைராக்கிய புருஷர்களுக்கு!! மனித வாழ்க்கையைச் சீர்குலைக்கும் கொடிய விஷம் பணமும், பேராசையும் என வாழ்ந்த மஹான் ஸ்வாமி ஸ்ரீதேஸிகன்.**

*****************************************************************************

## விரோத பரிஹாரம் என்ற ரஹஸ்யம் ஸ்வாமி தேசிகன் அருளிய கடைசி க்ரந்தம்

ஸ்ரீநைனாராசார்யர் இந்த ரஹஸ்யத்தை ஸம்ஸ்க்ருதத்தில் அருளியுள்ளார். அதில் அவதாரிகையில் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் நிரூபிக்கப்பட்ட அர்த்த விசேஷங்களில் உண்டாகிய சங்கைகளுக்கு இதில் ஸமாதாநம் அருளியுள்ளதாக ஸாதித்திருக்கிறார்.

விரோத பரிஹாரம் 4 அதிகாரங்கள் கொண்டது.

1-80 வாக்யங்கள் திருமந்த்ர விஷயம்

81-90 த்வய விஷயம்

91-100 சரம ச்லோக விஷயம்

101-107 மூன்று ரஹஸ்யங்களும் அவச்யம் பற்றி கூறுகின்றன.

108ல் பிற்காலத்தில் வரும் சங்கைகளும் இதே ரீதியில் நிராகரிக்கப்பட்டனவாகும் என்கிறார்.

109ம் வாக்யத்தில் ப்ரதான அம்சத்தில் தெளிவு உண்டாகில் பல ஸித்தி உண்டாம் என உபஸம்ஹாரம் செய்கிறார். திருவஹீந்த்ரபுரத்தில் அருளிச்செய்த க்ரந்தம்.

*****************************************************************************

## ஸ்வரூப நிஷ்டையின் அடையாளங்கள்

- ஆத்மா தேஹாதி விலக்ஷணன். அப்படியிருக்க ஸரீரகதமாக பிறர் தன்னை அவமதித்தால் அது தன் ஆத்ம ஸ்வரூபத்தில் தட்டாமையை எண்ணி வருத்தமற்றிருக்கை.
- எந்தவொரு காரணமுமின்றி, தன்னிடத்தில் இல்லாத ஒரு தோஷத்தைச் சொல்லித் தன்னை அவமதித்து தன் பாபத்தை வாங்கிக் கொள்ளும் பிறரிடம் கரைபுரண்ட கருணை கொள்ளுதல்.
- தான் நினைத்துக்கொள்ளவேண்டிய தன் குற்றங்களை எடுத்துக் கூறி நினைவூட்டியதற்கு அவர்களிடம் நன்றியறிதல்.
- கர்மானுகுணமாக பலன் கொடுக்கும் எம்பெருமானால் தூண்டப்பட்டே பிறர் தன்னை அவமதிப்பதாக எண்ணி அவர்கள்பால் மனம் வேறுபடாமை.
- தன் குற்றத்தை வெளியிட்டதால் தன் பாபம் (பிராரப்த கர்மாவில் இருக்கக் கூடிய பாபாம்ஸம்) கழிகின்றதென்று மகிழ்தல்.

*****************************************************************

## எழுமைக்கும் எனதாவிக்கும் இன்னமுது :

எல்லாக் காலத்திலேயும் என் ஆத்மாவுக்கு பரமபோக்யமாய், என் ஆத்மாவோடு கலந்து அதனால் ப்ரகாசிக்கின்ற தேஜஸ் உடையவனை, மணிவண்ணனை, குடக்கூத்தனை,நீல மணிபோன்று முடிந்து ஆளலாம்படி சுபாவம் உடையவனை, ஆச்சர்ய சேஷ்டிதனை, அமரர்கள் விழுங்கும் கன்னல் கனி போன்றவனை தூய்மையான சித்த மனசுடன் சேவியுங்கள் என்கிறார். அவனைத் தொழுதால் க்ஷணமும் நில்லாது துயரங்களே. ஸம்சாரிகமான துயரங்கள் கொஞ்சமும் நில்லாது கழிந்து போம் என்கிறார்.

*****************************************************************

## கர்மயோக ஸ்வரூபம் :

கர்மயோகம் என்பது ஜீவாத்மா பற்றும் பரமாத்மாவினுடைய உண்மையான ஜ்ஞாநம் பிறந்தால், தன்னால் செய்யக்கூடிய நித்ய, நைமித்திக, காம்ய கர்மங்களில் பலனை எதிர்பார்க்காமல் செய்து கொண்டிருப்பது. கர்மயோகிகள்

தைவமேவாபரே யஜ்ஞம் யோகிந:பர்யுபாஸதே

ப்ரஹ்மாக்நாவபரே யஜ்ஞம் யஜ்ஞேநைவோபஜுஹ்வதி ||

என்று கீதையில் கூறியபடி தேவார்ச்சன - தபஸ்தீர்த்த - தான -யஜ்ஞாதி ரூபமான தேவதாராதநத்தைச் செய்கிறார்கள்.

*****************************************************************



